அரசு கலைக்கல்லூரி [தன்னாட்சி] கோவை-18

முதலாமாண்டு இளங்கலை, அறிவியல், வணிகவியல்

பகுதி - I தமிழ்ப்பாடத்திட்டம் [2018-2020]

முதல் பருவம் - தமிழ் - தாள்- I Subcode: 18TAM11L

அலகு- II செய்யுள் (ஆ)

சூழலியல் -

1. எரியும் காட்டுக்குயில்கள் - நீலமணி

பெண்ணியம்

1. அவமானப்படுத்தப்பட்டவள் - சிவரமணி
2. எதை நினைத்தழுவதும் சாத்தியமில்லை - ஔவை
3. கருவறை வாசங்கள் - கனிதாசன்
4. என் பூர்வீக வீடு - சல்மா
5. பழமைக் காட்சிகள் - இளம்பிறை
6. பிரயாசங்கள் - தேன்மொழி

## தொழிலியல் : எரியும் காட்டுக்குயில்கள் - நீலமணி

### கவிஞர் நீலமணி ஆசிரியர் குறிப்பு:

மரபுக்கவிதையிலும் புதுக்கவிதையிலும் மதிக்கத்தக்க சாதனைகள் புரிந்தவர். 'பாரதிதாசன் விருது' பெற்ற கவிஞர் நீலமணி பாரதிதாசனைப்போல் எதையும் அழுத்தமாகவும் அழகாகவும் சொல்லும் ஆற்றல் மிக்கவர். பாற்கடல் தீவுகள், நீலமணி கவிதைகள், தீர்க்க ரேகை, தன்மை முன்னிலை படர்க்கை ஆகியன இவரது படைப்புகள். எரியும் காட்டுக்குயில்கள் எனும் கவிதை தொழிற்சாலைக் கழிவுகளால் இயற்கை மாசுபடுவதைப் பற்றிப் பேசுகிறது.

### பாடல் விளக்கம்:

இயற்கை மனிதனால் பல்வேறு வழிகளில் மாசுபடுவதைப் பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

**கங்கையும் சாக்கடை:** வானமுதம் என்று சிறப்பிக்கப்படுவது மழை. அந்த அமுதமே அமிலமானது. மையின் அசுரத்தனம் வாயில்வெளியில் கங்கையும் இன்று சாக்கடையாய் விட்டது.

**ஆகாயத்துக்கும் காசம்:** பசுமைப்புரட்சிக்கான உரமும் மருந்தும் தாய்ப்பாலுக்குள் நஞ்சாய் வந்துவிட்டன. நீர்நிலைகள் சேறுபிடித்து ஆகாயத்துக்கும் காசம் ஏற்பட்டுவிட்டது.

அருகில் வந்து மழையில் கனக்கின்றது கருதிப் பூக்களும் மலர அச்சம் கொள்கின்றன.

**ஆலைகள் பறித்தும் பாடு:** நீருக்கு நிறமில்லை என்பது பழங்காலச் செய்தி. இன்று வாணியம்பாடிகளில் வானவில்லைக் காட்டிடும் நீருக்கே நிறம் அதிகம்.

நோயினில் நீர்மமாய் இறங்கும் பலாவிலை பிஸ்கோஸ், அடை, சர்க்கரை, ஆலைகள் பிறக்கிற பாட்டில்...

**நித்திய நரகம்:** நம் கண்ணில் இருக்கும் அதிகார நிமிட மணங்களில் நமக்கு நாள்தோறும் நரக வேதனை. உலகத்தைச் சுருக்கும் போக்குவரத்து உயிர்களின் கழுத்தைச் சுருக்காகிவிட்டது.

பெட்ரோல் எ.யந்திரால் சாலையோரக் கனிகளில் புற்று, ஆற்று மீன்களில் பூசல் ரத்தம்.

**ஓசோன் கூரை கிழிகிறது:** தொந்திக்காரனின் 'ஏசி'க்கான குளோரோ புளோரோ கார்பன்களால் ஓசோன் கூரை கிழிகிறது. ஊதாக் கதிர்ப்படை இறங்கி வந்து உயிர்களைக் கொல்கிறது.

**பூமிக்குக் காய்ச்சல்:** நாளும் நச்சுண்டு காற்றுமண்டலம் கனக்கிறது. பூமிக்குக் காய்ச்சல். பருவங்கள் மாறிப் பொங்கும் கடல் நீரில் தீவுகள் அமிழ்ந்து போகின்றன.

**தவணை முறை ஹிரோஷிமாக்கள்:** தொழிற்சாலைச் சுரண்டலுக்கு உதவியாய் மின்சக்தி தர மண்ணின் மைந்தர்களை விரட்டுகின்றன தவணைமுறை ஹிரோஷிமாக்கள்.

**போபால் நஞ்சு:** பூச்சிகளை அழிக்கப் புறப்பட்ட போபால் விஷவாயுவால் பல்லாயிரம் மக்கள் மூச்சுத் திணறி மடிந்து போயினர். இப்படி அப்பன் மேல் குதிக்கும் பாய்கிற லத்திச் சட்டம் முதலாளி என்றதும் வாலைச் சுருட்டி வணக்கம் சொன்னது.

**கப்பலேறி அலையும் கழிவுகள்:** இப்போது அரக்க நாடுகளின் கழிவுகள் புதிய கரைகளுக்காகக் கப்பலேறி அலைகின்றன.

**விதவைப் பூக்கள்:** கழிவுகளால் மாசுபட்ட நதியும், தென்றலும், கதிரும், மழையும் உரிய பலன் தரவில்லை. விதவைப்பூக்கள், வியர்த்த தென்றல், கருப்புச் சூரியன், மலட்டு மழை.

**பஞ்சபூதங்களுக்குப் பஞ்சம்:** பஞ்ச பூதங்கள் படைத்த பாரம்பரியங்களையெல்லாம் மனிதனால் இன்று பஞ்சபூதங்களுக்கே பஞ்சம் உண்டாகிவிட்டது.

**கவிதைத்திறன்:** இன்று எரியும் பிரச்சினைகளில் ஒன்றாக இருப்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பாகும். எரியும் காட்டுக்குயில்கள் என்னும் தலைப்பு தொழிற்சாலைக் கழிவுகளால் இயற்கைக்கு ஏற்படும் அழிவினையே காட்டுகிறது.

வினாக்கள்:

ஓரிரு சொற்களில் விடை தருக:

1. எரியும் காட்டுக் குயில்கள் என்று கவிஞர் நிலவுமணி எதனைக் குறிப்பிடுகிறார்?
2. லாப வெறியில் கங்கையும் இன்று என்னவாயிற்று.
3. இன்று உயிர்களின் கழுத்துக்குச் சுருக்கு எது?

விரிவான விடையளி:

4. ஐம்பூதங்கள் மனிதனால் சீர்கேடடைவதைக் கவிஞர் நிலவுமணி எவ்வாறு பதிவு செய்துள்ளார்?
5. ஒசோன் கூரை கிழிய முதன்மைக் காரணமாக நிலவுமணி கூறுவது யாது?

கட்டுரை வடிவில் விடையளி:

6. எரியும் காட்டுக்குயில்கள் கவிதையில் நிலவுமணி கூறும் சுற்றுச்சூழல் செய்திகளைத் தொகுத்து வரைக.
7. அறிவியல் கருத்துக்களும் நிலவுமணியிடம் அழகிய கவிதை வடிவம் பெறுவதை எடுத்துக் காட்டுக.

பெண்ணியம்.

## 1. அவமானப்படுத்தப்பட்டவள் - சிவரமணி

### கவிஞர் சிவரமணி ஆசிரியர் குறிப்பு:

ஈழத்துப் பெண் கவிஞர், சிவரமணியின் கவிதைகள் அடக்குமுறைக்கு அப்பாற்பட்டுப் பாடுபொருளில் வேறுபட்டவை. யுத்தத்தையும் அதன் கொடூர விளைவுகளையும் கவிதைகளாக்கியவர். இவரின் கவிதைகளின் மொழிஆளுமை அசாதாரணமானது. அர்த்தமான கவிதைகளைப் புனைக்கும் ஆற்றல் பெற்ற பெண்ணியக் கவிஞரான இவர் இளம் வயதிலேயே உலகைவிட்டுப் பிரிந்து சென்றது இலக்கிய உலகிற்கு மிகப்பெரிய இழப்பு.

### கவிதை - விளக்கம்:

பெண் என்பவள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஆணாதிக்கச் சமுதாயம் வரையறைகளை வகுத்துள்ளது. அந்தச் சாரத்திற்குப் பின்னால் என்னை உள்நிறுத்த முடியாது. இதுவரை காலமாக நிரந்தரமாகச் சகதிக்குள் கிடந்திருந்த சிறுகல்லைப் போன்று என்னை நானே கண்டெடுத்துள்ளேன்.

என்னுடைய காலங்களை இனியாராலும் பறித்து வைத்துக் கொள்ள முடியாது. சிறிய வெளிச்சம் உடைய நட்சத்திரம் தன்னை மறைக்கும் விரல்களுக்கிடையே நின்று கீழிறங்கி நிலைநிறுத்தும் போல். என் இருத்தல் உறுதி பெற்றது. நிராகரிக்க முடியாதவள் நான். இனியும் என்ன? என்ற வினாவை என் முன் வைக்க முடியாத அளவில் தூக்கி எறியப்படாத கேள்வியாய் தோன்றியுள்ளேன்.

என்னை அவமானங்களாலும் அநாகரீக வார்த்தைகளாலும் போர்த்துங்கள் ஆனால் உங்கள் எல்லோரினதும் நாகரீகம் வார்த்த கனவுகளின் மீது ஒரு அழுக்குக் குவியலாய் பனிச்சிடும் உங்கள் காலணிகளை அசுத்தம் செய்கிறேன்.

என்னுடைய நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்படும் வரை உங்களின் எல்லாப் பாதைகளும் அழுக்கும் படிந்தவையே.

வினாக்கள்:

ஒரு சொற்களில் விடை தருக.

1. கவிஞர் சிவரமணி கவிதைகள் எத்தன்மையன?

விரிவான விடையளி:

2. தனது இருத்தலைக் குறித்து சிவரமணி புலப்படுத்துவது யாது?
3. யாருடைய பாதைகள் அழுக்குப் படிந்தவை எனக் கவிஞர் சிவரமணி கூறுகிறார்.

கட்டுரை வடிவில் விடையளி:

4. 'அவமானப்படுத்தப்பட்டவளாக' ஏன் பெண்ணைக் குறிப்பிடுகிறார் சிவரமணி?

## 2. எதை நினைத்தழுவதும் சாத்தியமில்லை. ஔவை.

**கவிஞர் ஔவை குறிப்பு.**

ஈழத்துக் கவிஞர். இவரது கவிதைகள் 'எல்லையைக் கடந்து' என்ற தொகுப்பாக வெளிவந்துள்ளது. கொழும்பில் வசித்துவருகிறார். போருக்கும் வன்முறைக்கும் எதிராகக் குரல் கொடுப்பவர். இருத்தலின் எதார்த்தமும் நடைமுறை வாழ்க்கையின் பிரதிபலிப்பும் இவரது படைப்புகளின் வெளிப்பாடாக அமைகின்றன.

**கவிதை விளக்கம்:**

எதையும் நினைத்தழுவதும் சாத்தியமில்லை. கண்ணின் அசைவுகள் செயலற்றுப் போய் கண்ணீர்ப் பைகள் வறண்டுபிளந்து வெறுப்பெனும் நெருப்பை யாரிடமும் கக்குவதற்கு வெறிகொண்டு இருந்த காலங்கள் மாறிவிட்டன. இன்றைய வாழ்வை நியாயப்படுத்த நேற்றைய வாழ்வைக் கொச்சைப்படுத்தும் பொய்மைகள் எமக்கு வேண்டாம்.

யாருடைய பிழை என்பதோ? வரலாற்றுச் சாபமோ? எதுவாகவும் போகட்டும் கருத்துக்களுக்கு விமர்சனம் எழுதி ஏடுகள் செயலிழந்து விட்டன. இலக்கியக் குழுவிலும், அரசியல் குழுவிலும் தன்நபர் தாக்குதல் தொடங்கியுள்ளது. துப்பாக்கி தூக்கும் பலமிழந்ததால் பேனாவும் வாயும் அதன் பணி தொடர்கின்றன. இருக்கும் நிலமிழந்து, வாழும் வாழ்விழந்து. முகமிழந்து போனது யார்.

மார்க்சியவாதி மறுபிறப்புப் பற்றி விவாதிக்கிறார். பிரம்மச்சாரி குழந்தைகள் வாழ்வின் தொடர்ச்சி என்கிறார். அரசியல்வாதி தியானம் பற்றிக் கற்றுக் கொடுக்கிறார். யாருடைய பிழையோ? வரலாற்றுச் சாபமோ? போராட்ட மனநிலையுடன் வந்தவள் மனைவியாய்

சமையலறைச் சிறையில் அடைபட்டிருக்கிறாள்.

மூலம் பெயர்வதைத் துரோகம் என்று கூறியவர், அந்நியத்தில் வீடு கட்டுகிறார். சித்திரவதை கொடுக்கும் பொறுப்பாக இருந்தவன் குழந்தை பெறும் மனைவியின் வேதனையை நினைத்து அழுகிறான். இவ்வாறு இரவல் கருத்தில் சவாரி செய்தவர் முகமிழந்து போனார்கள். காலம் பதில் சொன்னபடி நகர்கிறது.

எதையும் நினைத்துவிடுவது இப்போது சாத்தியமில்லை. மனிதநேயத்தில் நம்பிக்கை கொண்டு உயிர்த்தெழுதலே வாழ்வாகும்.

**வினாக்கள்:**

**ஓரிரு சொற்களில் விடை தருக:**

1. 'எல்லையைக் கடந்து' கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் யார்?
2. விமர்சனம் எழுதி எழுதி ________ செயலிழந்து போனது.
3. எதை நினைத்துவிடுவதும் சாத்தியமில்லாத போது எதன் மீது நம்பிக்கை வேண்டுமென ஔவை கூறுகிறார்?

**விரிவான விடையளி:**

4. எத்தகைய பொய்மைகள் வேண்டாம் என ஔவை கருதுகிறார்?
5. முகமற்றுப் போனவர்கள் என யாரைக் குறிப்பிடுகிறார் கவிஞர் ஔவை?

**கட்டுரை வடிவில் விடையளி:**

6. மனிதத்தின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று ஔவை கூறக் காரணம் யாது.
7. எதை நினைத்துவிடுவதும் சாத்தியமில்லை என்று ஏன் ஔவை குறிப்பிடுகிறார்?

# 3. கருவறை ஓலங்கள்

- கவிதாசன்

## கவிதாசன் ஆசிரியர் குறிப்பு

கோவை மாவட்டம் கந்தே கவுண்டன் சாவடியில் 1962 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது இயற்பெயர் முருகேசன் 1982 ஆம் ஆண்டில் கோவை அரசு கலைக்கல்லூரியில் இளங்கலைப் பட்ட வகுப்பில் சேர்ந்து பயின்றார். படிக்கின்ற காலத்திலேயே எழுத்திலும் பேச்சிலும் சிறந்து விளங்கியவர்- இரண்டாம் ஆண்டு படிக்கின்ற போது இவர் எழுதிய 'நனவுகளும் கனவுகளும்' என்ற கவிதைத் தொகுப்பு பாராட்டினைப் பெற்றது. பாரதிதாசன், கண்ணதாசன் போன்று எண்ணற்ற கவிதை நூல்களும் சுயமுன்னேற்றக் கட்டுரை நூல்களும் எழுதிய இவர் சிந்தனைக் கவிஞர் என்று போற்றப்படுகின்றார். கடந்த 20 வருடங்களாக ரூட்ஸ் நிறுவனத்தின் இயக்குநராகப் பணியாற்றி வரும் இவர் 2002 ஆம் ஆண்டில் பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரியில் சிறந்த முன்னாள் மாணவருக்கான விருதினை முன்னாள் குடியரசுத் தலைவர் Dr A.P.J அப்துல்கலாமிடம் பெற்றவர். 'பிறப்பு தரித்திரமாக இருந்தாலும், இறப்பு சரித்திரமாக இருக்க வேண்டும்'. 'முடங்கிக் கிடந்தால் சிலந்தி கூட உன்னைச் சிறைபிடித்துவிடும் எழுந்து நடந்தால் எரிமலையும் உனக்கு வழிகொடுக்கும்'. இவை போன்ற தன்னம்பிக்கை தரும் கவிதைகளைப் படைக்கும் இவர் IAS, IPS மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்குகிறார்.

## பாடல் விளக்கம்:

* இதயம் உள்ளோருக்கு இதயத்தின் கேள்வி. கருவறையின் அரும்புகளை வெட்டிப்புதைத்தல் விவேகமா? மனித நாற்றுகளை முளையிலேயே கிள்ளி எறிவது சுகம் தருமா?

* உணர்வுகளால் உடல்தறியில் உயிர் ஆடை நெய்து அது கருவாகிப் பக்குவப்படும் முன் மனிதர்களை ஊனமாக்கிவிட்டு

கருவறையிலேயே கல்லறை கட்டிவிடத் துணிந்துவிட்டோமே!

★ உலகையே சிறைபிடித்துவிடும் ஆற்றல் படைத்த உயிர்த்துளியாக அக்கரு உருவாகலாம்

★ உலக இருளையே மாற்றி ஒளிமயமான எதிர்காலத்தை தரக்கூடிய மகத்துவமான துளி கூட மரணிப்படலாம்.

★ இன்பம் நோக்கி செயல்படாமல் அறிவிடம் கேள்வி கேட்டால் அழுத்தமான கருவில் நஞ்சைக் கலக்கும் துயரம் நிகழாது.

★ அகல் விளக்கை அணைக்கும் முன்பு அறிவு விளக்கை ஏற்ற வேண்டும்

★ உயிர்காக்கும் மருத்துவரின் கைகள் சிசுக் கொலைக்கு ஆட்படுத்திவிடக்கூடாது.

★ கருவறையைக் கல்லறையாக்கும் மடமைச் சிந்தனைக்குத் தம்மை தாழ்ப்பாள் போட வேண்டும்

★ பெண்ணே உலகைக் காக்கும் மனிதம். அறிந்த நாற்றினை அடிவயிற்றில் சுமக்கும் ஆச்சரியக்குறி.

★ கனி கனிவதற்குள் சிதைக்கப்படுமாயின் மகரந்தச் சேர்க்கைக்கு மலர் மறுப்புச் சொல்ல வேண்டும்

★ அன்பின் அரும்புகள் மலர்வதற்குள் மரணப்படுவதாயின் செடியின் முட்கள் சினம் கொள்ள வேண்டும்

★ கருவிலேயே சிதைக்கப்படும் சிசுவிற்காகச் சில நிமிடங்களேனும் சிந்திக்க வேண்டும்.

★ கருவைக் கலைக்க நீங்கள் வரதட்சணைத்தீயின் நச்சுநாக்குகளா?

★ வறுமைப் புயலா?

★ பருவத் தவறலா?

★ உதரப்பந்து உடையாமல் காக்க உடனடித்தேவை பெண்மையின் பெருமையும் மட்டுமல்ல ஆண்மையின் அரவணைப்புதான்

கருக்கலைப்பு, பெண்சிசுக்கொலை ஆகியவற்றைக் கண்டிக்கும் விதமாக கவிதாசனின் கருவறை ஓலங்கள் அமைந்துள்ளது.

**வினாக்கள்:**

**ஓரிரு சொற்களில் விடை தருக:**

1. கவிதாசனின் கவிதைத் தொகுப்பின் பெயர் என்ன?
2. பெண் எத்தகையவள் என்று கவிதாசன் கூறுகிறார்?
3. எழுந்து நடந்தால் எருமையும் வழிகொடுக்கும் என்றவரிகளுக்கு உரிமையாளர்?

**விரிவான விடையளி:**

4. உதிரப்பந்து உடையாமல் காக்க பெண்ணுக்குக் கவிதாசன் கூறும் அறிவுரைகள் யாவை?
5. இதயம் உள்ளோருக்குக் கவிதாசன் முன்வைக்கும் கேள்விகள் யாவை?

**கட்டுரை வினா**

6. கருவறை ஓலங்களாகக் கவிதாசன் கூறுவன யாவை?

## 4. என் பூர்வீக வீடு - சல்மா.

### சல்மா ஆசிரியர்குறிப்பு:

இயற்பெயர் இராசாத்தி. 90களில் எழுதத் தொடங்கியவர். 'ஒரு மாலையும் இன்னொரு மாலையும்' என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் இலக்கிய உலகில் தனக்கான தனி இடத்தை அடையாளப்படுத்தியவர். இவரது கவிதைகள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. உலக அரங்கில் கவிதைக் களங்களில் பங்கேற்று வருகிறார். சிறந்த இலக்கிய விருதுகளையும் பெற்று வருகிறார். 'இரண்டாம் ஜாமங்களின் கதை' என்ற இவரது நாவல் பல்வேறு விமர்சனத் தளத்தில் பேசப்பட்டது.

### பாடல் விளக்கம்:

பெண்கள் தங்கள் அனுபவத்தை மன வேட்கையைப் பதிவு செய்யத் தொடங்கியுள்ளனர். கவிஞர் சல்மாவும் ஒரு பெண்ணின் தனிப்பட்ட உணர்வினை இங்கே பதிவு செய்துள்ளார்.

இக்கவிதையில் ஒரு பெண் தன்னுடைய முதல் பூப்பு நிகழ்ச்சியின் அனுபவத்தைப் பதிவு செய்துள்ளதைக் காணலாம். பெண்களின் உடலியல் ஒரு நிகழ்வே மாதவிலக்கு. பெண் தாய்மை என்ற நிலையை அடையத் தயாராகிவிட்டதை உணர்த்தும் இயற்கை நிகழ்வினால் பெண்களுக்கு ஏற்படும் அனுபவத்தை இக்கவிதை பெண்களுக்குரிய

முற்றிலுமாக
தன் அடையாளமிழந்து
நொறுங்கிக் கிடக்கிறது. என்று இங்கே தான் இருந்த வீடு முற்றுமாக அடையாளமிழந்து காணப்படும் தன்மையைப் பதிவு செய்திருக்கிறார். தன் இருப்பு இருந்த வேதனைகளை வெளிப்படுத்தியுள்ளார்

என் பூர்வீக வீடு நான் இல்லையெனினும் என் பால்ய காலத்தின் நினைவுகள், என் விளையாட்டுத் தடங்கள் இன்று கூட எஞ்சியிருக்கக்கூடும். ஒருபுறம் நானிருக்க மறுபுறம் வேம்பும் என்னோடு என் மனத்திற்கு நெருக்கமாய் இருக்கிறது. என்று பெண் அவள் வாழ்ந்த வீட்டிலிருந்து அந்நியப்பட்டு நிற்கின்ற நிலையைப் பதிவு செய்கிறாள் சல்மா. இக்கவிதை 'பச்சை தேவதை' என்ற கவிதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ளது.

வினாக்கள்:

ஒரிரு சொற்களில் விடையளி:

1. 'பூர்வீக வீடு' எந்தக் கவிதைத் தொகுதியில் காணப்படுகிறது?

2. 'மாலையும் இன்னொரு மாலையும்' கவிதை தொகுதியை எழுதியவர் யார்?

3. சொந்தமாக அடையாளமிழந்து கிடப்பதாக ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகிறார்?

விரிவான விடையளி

4. தன் பால்ய கால நினைவுப் பெட்டகமாக பூர்வீக வீட்டை எவ்வாறு அடையாளப் படுத்துகிறார்?

5. பெண்ணின் மன உணர்வுகளைச் சல்மா எவ்வாறு பதிவு செய்துள்ளார்?

கட்டுரை வினா.

6. 'என் பூர்வீக வீடு' கவிதையில் இடம்பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்து எழுதுக.

# 5. பழமைக் காட்சிகள்

இளம்பிறை

## இளம்பிறை ஆசிரியர் குறிப்பு

இயற்பெயர் க. பஞ்சவர்ணம். 1988 இல் இருந்து எழுதிவருகிறார். இளவேனில் பாடல்கள், மவுனக்கூடு முதல் மனுசி ஆகிய கவிதைநூல்களை வெளியிட்டுள்ளார். இவரது அனைத்துக் கவிதைகளும் நிசப்தம் எனும் பெயரில் தொகுப்பாக வெளிவந்துள்ளது. இவர் கவிதைகளில் பாசாங்கு இல்லை. அகம், புறம் சார்ந்த கவிதைகள் எதுவாயினும் இவர் தான் நம்புகின்றவற்றையே எழுதுபவர். இவர் கவிதைகள் நம்பிக்கை - நம்பிக்கையின்மைக்கும் இடையேயான முரண்பட்ட மன உணர்வுக வெளிப்பாடாக அமைகின்றது.

## கவிதை விளக்கம்:

★ வளைந்து போன தன் விழுந்த வாக்காளர்கள்

★ துன்புறுத்துபவர்களையும் நசுப்பவர்களையும் மாறி மாறித் தேர்ந்தெடுத்து வெற்றி பெறச் செய்கின்றனர்.

★ சாதி, மத பேதங்களின் வன்முறையால் மனக்காயங்களோடு புகார் கொடுக்கச் சென்ற பெண்களைக் காவல் நிலையங்கள் உடல்காயங்களோடு வெளியே எறிந்தன. எங்குமே பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

★ பதவி, பணம் துணைகொண்டு சட்டவிதிகளை மாற்ற நெருக்கடி கொடுக்க வியர்த்துப் போயின சட்டங்கள். சரியாக வழங்கப்படுகின்றன.

★ எங்கேனும் சில தீர்ப்புகள்

★ தாய்த்தமிழையும் தள்ளிவைக்கும் மாற்றாந்தாய் மனநிலையோடு சட்டங்கள். இதயத்தை இறுக்கும் தூக்குக் கயிறுகள்

★ லாரிகள் இறங்கி மணல் நிரப்பிக்கொள்ளுகின்றன ஆற்றுப் படுகைகளில்.

✱ உருவாக்கப்பட்ட சிறைகளாய் மயல்களை அழித்து வீடுகள் தோற்றம் கொள்கின்றன.

✱ ஓசோன் படலம் கிழிந்து அமில மழைக்கு வித்தாகின்றது.

✱ இயற்கையின் கருப்பைக்குள் கை நுழைத்த ஆலைகள்.

✱ பிறக்கும் முன்னர் கருவிலேயே சிதைக்கப்படும்
பிறந்த பின்னர் கள்ளிப்பால் கொடுக்கும்
வளர்ந்தும் வன்மம் தீராமல் எரியூட்டப்படும் பெண்கள்

✱ நூற்றாண்டின் கடைசி சூழ்ச்சி வறுமைகளின்
காட்சிப் படிமங்கள்

**வினாக்கள்:**

**ஓரிரு சொற்களில் விடையளி:**

1. இன்றைய வாக்காளர்கள் நிலையாக இளம்பிறை கூறுவது யாது?
2. காவல் நிலையங்களின் அவலநிலை குறித்து இளம்பிறை குறிப்பிடுவன யாவை?

**விரிவான விடையளி:**

3. இயற்கை மீதான சுரண்டல் வன்முறையைக் கவிஞர் இளம்பிறை எவ்வாறு பதிவு செய்துள்ளார்?
4. பெண்கள் சமூகத்தில் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்று இளம்பிறை கவிதை புலப்படுத்துகிறது?

**கட்டுரை வடிவில் விடையளி**

5. 'படிமக் காட்சிகள்' கவிதை உணர்த்தும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
6. கவிஞர் இளம்பிறை இன்றைய சமூகத்தின் அவலங்களை எவ்வாறு பதிவுசெய்துள்ளார்?

# 6. பிரயாணங்கள் - தேன்மொழி

## தேன்மொழி - ஆசிரியர் குறிப்பு

இலங்கையை சேர்ந்த 1996 இல் பிறந்த எழுத்தாளர் 'துறவிலாத இலை இல்லை' என்ற கவிதைத் தொகுதி நூலினை வெளியிட்டுள்ளார். இவரது கவிதைகள் மனித நேயத்தையும் அன்பையும் வெளிப்படுத்துபவையாக அமைகின்றன. கிராமத்து வாழ்க்கையோடு இணைந்த இயற்கையும் அழகில் உடைய தீர்வும் வாழ்வின் எதார்த்தமும் அனுபவமும் பின்னணியில் தன்மையில் கவிதைகள் எழுதப்பட்டுள்ளன.

## கவிதை விளக்கம்

பூச்செடிகளை நட்டுவைத்து அழகுபார்க்கும் மனதைத் தன் அவற்றை வெட்டிக் காய்ந்த தோட்டமாக மாற்றும் தன்மையை உணர்வு நிலை வெளிப்படக் கவிதை அமைகிறது.

☆ மலைக்காலை வெளிகளில், மேகங்கள் பக்கங்களில் ஏகாந்தமாக வீட்டின் தோட்டத்தில் மின் வேலிகளின் ஊடே ஏதுக காலங்களோடு பூச்செடிகளையும் தோழர்களையும் வேட்டையாடிக் கொண்டிருக்கும் இடையில் செதுக்கியிருக்கிறாள்.

☆ வெண்பனியின் கற்பனையை கண்டு களித்துப் போனது.

☆ கனிகொண்ட நிழல் காற்றுக் கரைந்த பிரிக்கப் பட்டது

☆ பூச்செடிகள் பிடுங்கப்பட்டு வெறுமையாய் இருந்த மண்ணைத் தொடர்ந்து பார்த்திருக்கிறாள்

☆ மழைத்துளியிலிருந்து பூவொன்று தொலைந்து போன இடத்தில் ஏதோ ஒன்று இருந்ததைப் பார்த்துப் பக்கம் பூக்கள் உள்ளதில் செல்லப் போட்ட மாதிரி அழகாய் இருக்கும்

☆ மரத்தின் வேரைக் கிளறி பச்சை மிளகாய் நாற்று நட்டு விட்டாள் அம்மா.

☆ வாங்கி போனாலும் பூச்செடியோடு நான். பூச்செடிகளைக் களைந்து காய்கறிகளை எதிர்பார்த்து அம்மா. இரண்டுபட்ட இரு துருவங்களாய் நாங்கள்.

☆ அடுத்த வீட்டுக்காரரின் பார்வையில் தோட்டத்தை மறைக்க மட்டுமே ரோஜாச்செடிகளும் பூமரக்கிளைகளுமா அம்மா என்று கேட்டால், உன்னை வளர்த்தது இத்தனைத் தூரமும் ரோஜாச் செடிகளுமா? என பதில் வினா தொடுப்பாள்.

☆ மண்ணின் மணத்தைப் பூக்கள் மட்டும்தான் அதிகமாய் விமர்சிப்பன என்றும். இயற்கையின் அன்னை மொழி மலர்கள் என்பதும் விளங்காமல் இருப்பாரோ என் அன்னை அம்மா?

☆ எனது முயற்சிகள் அனைத்தும் என் கவிதைகள் போல் கவனிப்பாரற்று வெற்றிடம் நிரப்பிப் பட்டுப்போய் இருந்தாலும் அவரது நியாயங்களில் ஏதாவது பூவின் மணமும் கவிதையின் அர்த்தமும் தம் நியாயமான இருக்கைகளை என்றாவது ஏற்படுத்தட்டும்.

☆ நம்பிக்கையோடு நான் பூச்செடிகள் வளர்ப்பதையும் கவிதைகள் எழுதுவதையும் நிறுத்தியதில்லை.

☆ பிரயாசங்கள் பலமுறை தோற்றாலும் என்றேனும் வெற்றிபெறட்டும் என்று தொடர்ந்து பிரயாசப்படுவேன் எனக் கவிதைத் தேன்மொழி உரைக்கிறாள்.

## வினாக்கள்:

### ஒரிரு சொற்களில் விடையளி

1. தேன்மொழி அவர்களின் கவிதைத் தொகுப்பின் பெயர் என்ன?
2. கவிஞர் தேன்மொழியின் இயற்பெயர் என்ன?
3. மண்பார்க்க தேவதைகள் எந்த வடிவில் வரும்?

### விரிவான விடையளி

4. மகன் நட்டுவைக்கும் பூச்செடிகளைக் களைந்து தந்தை என்ன செய்வார்?
5. மண்ணிலிருந்து தந்தை எதிர்பார்ப்பது யாது எனத் தேன்மொழி கூறுகிறார்?

### கட்டுரை வடிவில் விடையளி:

6. 'பிரயாசங்கள்' கவிதையில் இடம்பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்து எழுதுக?
7. தேன்மொழியின் பிரயாசங்கள் தோல்வியடையக் காரணம் என்ன?